பிடுவது போல பணிமனை கட்டி பெரிய அளவில் செய்வதற்கு இயலாது. அங்கே இருக்கிற மேலாளர் சொன்னதாகச் சொன்னார்கள். அது லாபத்திலே ஓடுவதாகச் சொன்னார்கள். மொத்தத்திலேதான் கணக்குப் பார்க்க வேண்டும். திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் என்பதில் தமிழகத்தில் ஓடக்கூடிய மொத்தப் பேருந்துகளில் எவ்வளவு லாபம் இருக்கின்றது. எவ்வளவு மொத்த வருவாய் இருக்கின்றது என்பதை அதிலே தான் கணக்கிட முடியுமே தவிர, ஒரு பகுதியை வைத்துக் கொண்டு அதிலே நாம் கணக்கிட முடியாது.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொஞ்ச காலத்திற்கு முன்பாக சம்பந்தப்பட்ட திருவள்ளுவர் டெப்போவைச் சேர்ந்த அதிகாரிகள் அங்கே டெப்போ கட்டுவதற்காக நிலங்களையெல்லாம் பார்த்தார்கள். நான் கூட ஒரு இடத்தைக் காட்டினேன். ஆனால் இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லுகிறார்கள். தயவுசெய்து எங்களுடைய நகரத்திலே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக டெப்போவை—நல்ல முறையில் செயல்பட்டுவரும் அந்தக் கிளைக்கு—நிரந்தரமாக சொந்தஇடத்தில் விரிவாகக் கட்டடம் கட்டுவதற்கு மீண்டும் அதைப் பரிசீலனை செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைச் செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 485, டாக்டர் மு. சீனியம்மாள், இருக்கையில் இல்லை.

வினா எண் 486. திருமதி கற்பகம் இளங்கோ, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

486—

காரைக்குடி, கழனிவாசல்-சூரக்குடி சாலையை அகலப் படுத்துதல்.

*20471—திருமதி கற்பகம் இளங்கோ:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி, கழனிவாசல்-சூரக்குடி சாலையை அகலப் படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

1994 மே 3]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது திட்டமேதுமில்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் சாலைகள் வரலாற்றில் புதிய சகாப்தத்தையே படைத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி ஆட்சியில் இங்கே குறிப்பிடப்பட்டுள்ள கழனிவாசல்-சூரக்குடி சாலையை அகலப்படுத்த வேண்டிய அவசியத்தையும் இன்றியமையாமையையும் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு உணர்வார்கள் என்ற அடிப்படையில், அந்தச் சாலைகளை அகலப்படுத்தினால், போக்குவரத்து வாகனங்கள் அதிகமாகத் திருப்பி விடப்பட்டு, விபத்துக்களையும் தடுக்க வாய்ப்பு உள்ளதால் கருணை கூர்ந்து அதைப் பரிசிலனை செய்து அடுத்த ஆண்டிலாவது எடுப்பதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள காரைக்குடி--சூரக்குடி சாலையானது 3 சாலைப் பகுதிகளை உள்ளடக்கிய சாலையாகும். இந்த சாலை ஒரு வழிப் பாதை சாலையாக இருக்கிறது. அதை அகலப்படுத்துவதற்கு தற்போது ஏதும் செயற்குறிப்பு அரசிடத்திலே இல்லை. பொதுவாக போக்குவரத்து அளவுகளைப் பார்த்துதான், பயணிகளின் ஊர்திகள் அளவின் அடிப்படையிலே தான், ஒருவழித் தடம் உள்ள சாலைகளை இருவழித் தடம் உள்ள சாலைகளாக மாற்றுவதற்கு ஒரு கணக்கு வைத்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே அந்தக் கணக்கிலே இந்த சாலை வரவில்லை. ஆகவே தான் அதை அகலப்படுத்துகின்ற பொறுப்பை எடுத்துக்கொள்ள இயலவில்லை. எதிர்காலத்தில் போக்குவரத்து அதிகமாகி அந்தப் பகுதியிலே பயணிகள் ஊர்தி அளவு அதிகமானால் அது சம்பந்தமாக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலையானது மிகக் குறுகிய சாலையாக இருப்பதால் தான் போக்குவரத்து வாகனங்கள் மிகக் குறைந்த அளவிலே—அதாவது நெடுந்தூர ஊர்திகள் சென்னையிலிருந்து காரைக்குடியோ அல்லது சென்னையிலிருந்து ராமேஸ்வரமோ செல்லுகின்ற ஊர்திகள் மட்டும் அந்தப் பகுதியிலேதான் செல்வதாக இருக்கிறது. அதனை அகலப்படுத்துவதால் அதிகமான பேருந்துகள் அந்த வழியிலே செல்லுவதற்கு வாய்ப்பு உள்ளதால் அதை மீண்டும் பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர் காலத்தில் இது பற்றி அரசு பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 487, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

487—

கீழப்பாவூர் ஒன்றியம், கழுநீர்குளம் வடக்குப் பேருந்து நிறுத்தத்திலிருந்து தார்ச்சாலை வசதி.

*20665—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், கழுநீர்குளம் வடக்குப்பேருந்து நிறுத்தத்திலிருந்து தெற்கே இரண்டு கிலோ மீட்டர் வரை தார்ச் சாலை போடாமலிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தார்ச் சாலை போட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் (பொதுப்பணித் துறை அமைச்சர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சாலைக்குத் தார் தளம் போடப்பட்டு சாலை நல்ல நிலையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி தார் ரோடு போடுவதற்கு முன்பு கேட்கப்பட்ட கேள்வி. இப்போது தார்சாலை போடப்பட்டுவிட்டதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எனவே அதற்காக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பக்கத்திலே இருந்தால் தெரியும் தார் போட்டிருக்கிறதா இல்லையா என்று. நீங்கள் அம்பா சமுத்திரத்திலிருந்து ஆலங்குளத்தில் எங்கேபோய்ப் பார்ப்பது?